**STC 47/2023**
**அ. சா. 3**
**பெயர் : சுமதி**
**19.03.2025**

**எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு வி**

1. எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். ரவி எனது அப்பாவிற்கு போன் செய்தபோது நான் வீட்டில் உடன் இருந்தேன். எனது அப்பா சொல்லிதான் எனக்கும் எனது அம்மாவிற்கும் தெரியும். போலீசார் என்னை வீட்டில் வந்து விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்த மறுநாள் வந்தார்கள். அசா.1 எனது அப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**STC 47/2023**

அ. சா. 1

பெயர் : சந்திரன்

19.03.2025

**எதிரி தரப்பில் கு வி**

1. நீதிமன்ற விசாரணையில் சொன்னதை தான் போலீசாரிடமும் சொன்னேனா என்றால் ஆமாம். எனது ஊரரான ராஜகோபாலபுரத்திற்கும் கீழபரளச்சி காவல் நிலையத்திற்கும் 5 கிலோமீட்டர் என்றால் ஆமாம். காவல் நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்காக கார் மூலம் சென்றதாக நான் சொல்லியுள்ளேன். யார் யார் என்னுடன் வந்தார்கள் என்றால் நானே கார் ஓட்டி சென்றேன் யாரும் வரவில்லை. எங்கள் ஊரிலிருந்து காவல் நிலையத்திற்கு 15 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் ஆமாம். புகாரை காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதி கொடுத்தேன்.

2. எதிரியின் பூர்வீக ஊர் எனது கிராமம் தான் என்றால் ஆமாம். கடந்த 2000ம் வருடத்தில் எதிரியின் மனைவி கர்ப்பமாக இருந்தபோது எனது பெரியப்பா மகன் சந்திரன் என்பவர் அவருடைய மனைவியின் நிறை மாத கர்ப்பிணி வயிற்றை பார்த்து அசிங்கமான வார்த்தையால் பேசியதற்காக அவர் மீது கீழபரளச்சி காவல் நிலையத்தில் குற்ற எண். 99/2000 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு பெரியப்பா மகன் சந்திரன் என்று யாரும் இல்லை. எனது பெரியப்பா மகன் மீது புகார் கொடுத்ததற்காக எதிரியை ஊர் மத்தியில் கட்டி வைத்து ஊரை விட்டு விலக்கி வைத்ததினால் அவர் புல்லப்பநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை.

3. நான் கொடுத்த புகாரில் எதிரி ரவியினுடைய செல்போனில் இருந்து கால் வந்ததாக சொன்னபோது அவருடைய செல்போன் நம்பரை குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. போலீசாரிடம் வாக்குமூலம் கொடுக்கும்போதும் மேற்படி நம்பரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். எதிரி எனது மகனுக்கு போன் செய்ததாக சொன்ன பிறகு நான் மற்றும் 10 நபர்களுடன் எதிரி வீட்டிற்கு சென்று எதிரியின் மகள் தேன்மொழியை மிரட்டி ஜாதி பெயரை சொல்லி திட்டியதாக எங்கள் மீது மேற்படி காவல்நிலையத்தில் குற்ற எண். 10/2023 வழக்கு தாக்கல் பதிவு செய்யப்பட்டது என்றால் பொய் வழக்கு பதிவு செய்துள்ளார்கள். ஆனால் நாங்கள் எந்த தவறும் செய்யவில்லை.

4. மேற்படி வழக்கை வாபஸ் வாங்க சொல்லி 17.01.2023ம் தேதி மாலை 05.00 மணிக்கு எதிரியின் வீட்டின் அருகே எதிரி ஆடு மேய்த்து கொண்டிருந்தபோது அவரை நான், எனது மகன் சரவணக்குமார், எனது

உறவினர்களான லெவன் மற்றும் செல்வா மற்றும் பல நபர்கள் சேர்ந்து அடித்து மிரட்டியதாக மேற்படி காவல் நிலையத்தில் குற்ற எண். 11/2023 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து நாங்கள் எதிரியின் வீட்டிற்கு சென்று வழக்கை வாபஸ் வாங்க சொல்லி தொந்தரவு செய்ததால் நான் உட்பட 15 நபர்களை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது என்றால் ஆமாம். பொய்யான வழக்கில் எங்களை உள்ளே வைத்துவிட்டார்கள்.

5. எதிரி பட்டியல் இனத்தவர் என்பதால் அவரிடம் பிரச்சனை செய்தது மட்டுமல்லாமல் மேல பரளச்சியில் உள்ள பட்டியல் இனத்தவரை சேர்ந்த குருசாமி என்பவரின் கறிக்கடையை உடைத்ததற்காக நான் உட்பட 15 நபர்கள் மீது பரளச்சி காவல் நிலையத்தில் குற்ற எண். 14/2023 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நாங்கள் அப்படி எதையும் உடைக்கவில்லை என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியாது. மேற்படி கடையை உடைத்ததாக என்மனைவி கலாவை வைத்து 22.01.2023 ம் தேதி எதிரி மீது புகார் கொடுக்கப்பட்டு எதிரி மீது குற்ற எண். 17/2023 பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம்.

6. ஏற்கனவே எதிரியை கட்டி வைத்து நாங்கள் அடித்து ஊரைவிட்டு விரட்டியதால் எதிரிக்கும் எங்களுக்கும் ஊர் பகை இருக்கிறது என்றால் சம்பவம் நடந்தபோது நான் ஊரில் இல்லை. அதன் பிறகு எதிரியை ஊரில் அடித்ததாக கேள்விபட்டேன். என்மீதும், எனது மகன் மற்றும் எனது உறவுக்காரர்கள் மீது கொடுக்கப்பட்ட வன்கொடுமை சட்டத்தின் கீழ் கொடுத்த புகாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எனதுமகனுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.